ISSN:2582-9599
பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# ‘பொம்மக்காவின் மூன்று பெண்கள்’ வழி உணரலாகும் மரபும் மரபுமாற்ற சிந்தனையும்

50

**JANCI P**
**joejancy@gmail.com**

**ஆய்வுச் சுருக்கம்**

‘பொம்மக்காவின் மூன்று பெண்கள்’ என்னும் இந்நாடகத்தில் பொம்மைகளை வைத்து கதை சொல்லும் பொம்மக்காவின் பார்வையில் நல்லதங்காள், திரௌபதி, விபச்சாரத்தில் பிடிபட்ட பெண் ஆகிய மூவரின் கதைகளும் மாற்றுரு பெறுகிறது. தற்கொலை செய்து கொண்ட நல்லதங்காள் புத்துயிர் பெறுகிறாள். யாரோ காப்பார் என எண்ணி நின்ற திரௌபதி தன்னைத்தானே காத்து புரட்சிப் பெண்ணாகிறாள். விலைமகள் என் மீது தவறெனில் இந்நிலையினை உருவாக்கியவருக்கும் தண்டனை தர வேண்டும் என நீதிக்குக் குரல் எழுப்புகிறாள். பல காலமாக நியாயமற்று தண்டிக்கப்பட்ட இவர்கள் மாற்றுரு பெறுகின்றனர். யாரையும் சாராது தன்னைத்தானே காத்துக் கொள்ளும் நிலைக்குப் பெண்கள் உயர்த்தப்பட வேண்டும் என்பதாலேயே இந்த நல்லதங்காள் புதிய உலகத்தைப் படைக்கத் தன் பிள்ளைகளுடன் புறப்படுகிறாள். இந்நிலையில் விலை மகளைச் சந்திக்கிறாள். தன் பக்க நியாயங்களால் பல்வேறு புரட்சிக் கருத்துகளை விதைத்து வெளியேறிவிட்ட இந்த விலைமகள் பெண் மீது இந்தச் சமூகம் வழிவழியாகத் தொடர்ந்து சுமத்திய பல்வேறு குற்றச்சாட்டுகளைக் கேள்விக்குள்ளாகிறாள். ஆண்களால் அடக்குமுறைகளுக்கு ஆட்பட்டு அவமானங்களால் கூனிக்குறுகி நிற்கும் பெண்ணினம் தலைதூக்க வேண்டியதன் அவசியத்தைத் திரௌபதி உணர்த்துகிறாள்.

**திறவுச்சொல்**

மரபுமாற்றம், நல்லதங்காள், திரௌபதி, பெண்ணிய நாடகம், காந்திமேரி

**முன்னுரை**

காலங்காலமாக மரபு சார்ந்த கட்டுப்பாடுகள் பெண் சமூகத்தின் மீது வலிந்து புனையப்பட்டு வருகிறது. இக்காலத் தேவையின் அடிப்படையிலும் அறிவார்ந்த சமூகத்தின் எழுச்சியாலும் மரபார்ந்த கட்டுப்பாடுகள் மீது கேள்விகள் எழுப்பப்பட்டு மரபுமாற்றச் சிந்தனைக்கான வழிமுறையினை இச்சமூகம் கட்டியமைக்க விளைந்துள்ளது. ‘பொம்மக்காவின் மூன்று பெண்கள்’ என்னும் இந்நாடகத்தில் பொம்மைகளை வைத்து கதை சொல்லும் பொம்மக்காவின் பார்வையில் நல்லதங்காள், திரௌபதி, விபச்சாரத்தில் பிடிபட்ட பெண் ஆகிய மூவரின் கதைகளும் மாற்றுரு பெறுகிறது. தற்கொலை செய்து கொண்ட நல்லதங்காள் புத்துயிர் பெறுகிறாள். யாரோ காப்பார் என எண்ணி நின்ற திரௌபதி தன்னைத்தானே காத்து புரட்சிப் பெண்ணாகிறாள். விலைமகள் என் மீது தவறெனில் இந்நிலையினை உருவாக்கியவருக்கும் தண்டனை தர வேண்டும் என நீதிக்குக் குரல் எழுப்புகிறாள். பல காலமாக நியாயமற்று தண்டிக்கப்பட்ட இவர்கள் மாற்றுரு பெறுகின்றனர்.

**மரபு**

சமூகத்தின் தேவைகளின் அடிப்படையில் சில பழக்கங்கள் உருவாகி அவை காலங்காலமாக பயன்பாட்டில் வழக்கமாகி அவ்வழக்கம் பின்னாளில் மரபாக மாற்றம் பெற்றுள்ளது. இம்மரபுகள் பெண் சார்ந்த உரிமைகளை மறுப்பதுடன் பெண்ணைப் பல்வேறு வகையிலும் அடிமைப்படுத்துவதாக அமைந்துள்ளது. **“மரபு என்பது வழிவழியாக வருகிற வழக்கம். ஆனால் அது வெறும் வழக்கம் அல்ல**

**அது உருவாகப் பல ஆண்டுகாலம் ஆகி இருக்கின்றது"[1]**

மரபு என்னும் பெயரில் ஓரினத்தின் உரிமை மறுக்கப்படும் போது அவ்வினம் மரபார்ந்த கட்டுப்பாடுகளை மாற்றி அமைக்க எண்ணுவது இயல்பே. அவ்வகையில் பொம்மக்காவின் மூன்று பெண்கள் கதை மரபுமாற்றச் சிந்தனையை நோக்கி பயணப்படுகிறது.

**மரபு மாற்றம்**

மக்கள் சமூகத்தால் தொடர்ந்து மரபாகப் போற்றப்பட்ட சில பெண்ணியக் கருத்துருவாக்கங்களைக் கால ஓட்டத்தில் பல்வேறு மாற்றுச் சிந்தனைகளின் தாக்கத்தால் மீளாய்வு செய்யும் நிலையினை உணர முடிகிறது. வழிவழியாக உருப்பெற்ற ஒரு கருத்தாக்கம் மாற்றம் பெற்றுள்ளதால் பெண் சமூகம் சார்ந்த பல்வேறு கண்ணோட்டத்திற்கு மாற்றம் வழங்கும் வாய்ப்பினை உணர முடிகின்றது. கணவன் துணையின்றி தனிமையில் பொருளாதாரத்தில் நலிந்த பெண் தற்கொலை செய்து கொள்ள வேண்டிய நிலையினை மாற்றித் தனித்து வாழும் தன்னம்பிக்கையினை நல்லதங்காள் கதையின் மாற்றுச் சிந்தனை வெளிப்படுத்துகிறது. பெண்ணைப் பணயப் பொருளாய் மாற்றி அவளை அவமானப்படுத்த எண்ணிய நிலையில் அதனை எதிர்த்து போர்க்குணம் கொள்கிறாள் திரௌபதி. தன்னைத்தானே காத்துக் கொள்ளத் துணிகிறாள். விலைமகள் தன் மீது குற்றம் சுமத்தும் இந்தச் சமூகம் தன் குற்றத்திற்கு யாரெல்லாம் காரணமோ அவர்கள் ஏன் தண்டிக்கப்படவில்லை என்ற நியாயமான விவாதத்தை முன்வைக்கிறாள்.

**புத்துயிர் பெற்ற நல்லதங்காள்**

நல்லதங்காளை ராஜாவிற்குத் திருமணம் செய்து கொடுக்கிறான் அவளது அண்ணன். அங்கு நன்றாக வாழ்ந்து ஏழு குழந்தைகளைப் பெறுகிறாள். அந்நாட்டில் ஏற்பட்ட வறட்சியின் காரணமாக வளமை குன்றிய நிலையில் நல்லதங்காளை அண்ணன் வீட்டுக்கு அனுப்பிவிட்டு தேசாந்திரம் செல்கிறான் கணவன். அண்ணன் வேட்டைக்குக் கிளம்பிய நிலையில் நல்லதங்காளை நன்றாகப் பார்த்துக் கொள்ளுமாறு மனைவி அலங்காரியிடம் கூறிச் செல்கிறான். **"சொத்துரிமை மறுப்பும் பெண்களைப் பெண்களே எதிரிகளாக நினைக்கும் சமூக உளவியலை உருவாக்கி வைத்துள்ளன".**[2] என்னும் இக்கூற்றிற்கு இணங்க நல்லதங்காளைப் பல்வேறுவிதமாகக் கொடுமைப்படுத்துகிறாள். இந்நிலையில் மரபு வழி நல்லதங்காள் பிள்ளைகளுடன் கிணற்றில் விழுந்து இறக்கிறாள். ஆனால் பொம்மக்காவின் நல்லதங்காளோ தன் கூந்தலை மட்டும் வெட்டிக் கிணற்றில் போட்டுவிட்டு இந்தக் கிணற்றில் என்னைத் தேடிக் கொண்டே இருக்கட்டும். **"வறுமையுற்ற காலத்தில் மனைவியையும் பிள்ளைகளையும் அவள் பிறந்த வீட்டிற்கு அனுப்பி வைக்கும் கணவன்மார்களுக்கு பாடம் ஆகட்டும். கஷ்டப்பட்டு பிறந்த வீட்டுக்கு பெண்கள் வரும்போது அவர்களை கவனிக்காத உடன் பிறந்தாருக்கு பாடம் ஆகட்டும்" ப.9** எனச் சமூகத்திற்குப் பாடம் புகட்டிப் புதிய உலகை உருவாக்க எண்ணுகிறாள்.

**திரௌபதி தீ**

பஞ்சபாண்டவர்களின் பத்தினியாகிய திரௌபதி, துரியோதனன் விழுவதைக் கண்டு எதார்த்தமாகச் சிரிக்கிறாள். பெண் தன்னைப் பார்த்துச் சிரிப்பதைப் பொறுக்காத துரியோதனன் அவளைப் பழி தீர்க்க எண்ணி திட்டமிடுகிறான். பாண்டவர்களைச் சூதுக்கு அழைத்துத் திரௌபதியைப் பணயப் பொருளாக்கி சூதில் வெல்கிறான். பழி தீர்க்க எண்ணிக் காத்திருந்தவன் திரௌபதியைச் சபைக்கு வர அழைக்கிறான். மாதவிலக்கில் இருக்கிறேன் என்னால் சபைக்கு வர முடியாது என மறுக்கிறாள். ஆனால் வலிந்து அழைத்து வரப்படுகிறாள். அவளை அவமானப்படுத்த எண்ணிக் காத்திருந்த துரியோதனனும் அவள் ஆடையைக் களைய துச்சாதனனைத் தூண்டுகிறான். துச்சாதனன் வர திரௌபதி தீயாக மாறுகிறாள், எதிர்த்துப் போர் செய்து துச்சாதனனைக் காயமுறச் செய்கிறாள். அவனைப் பல்வேறு விதங்களில் கலங்கடித்து வெற்றித் திருமகளாய் நிற்கிறாள். யாருமே

இல்லை எனினும் தன்னைத்தானே காத்துக் கொள்கிறாள். புராணத் திரௌபதியோ யாராவது வந்து தன்னைக் காக்கமாட்டார்களா என கைத்தூக்கி நிற்க, இந்த பொம்மக்காவின் திரௌபதியோ பெண்கள் இல்லாத சபைக்கு பெண்ணை அழைத்தது ஏன் எனவும் சபையோர்களைப் பல்வேறு வகையில் புரட்சிகரமான கேள்விகளால் சிந்திக்கச் செய்கிறாள். பெண்ணைக் காப்பது ஆணின் கடமை என்பதை மாற்றி தன்னைத்தானே காத்துக் கொள்ள பெண்ணால் முடியும் என நிரூபிக்கிறாள். **"என்னை நானே காத்துக் கொள்வேன் கணவன் துணையாக இருப்பான் என்ற நம்பிக்கையை நான் இழந்து விட்டேன் இதோ என் கூந்தலை விரித்து விடுகிறேன் துச்சாதனன் மட்டும் என்னை தொடட்டும் என்ன நடக்கிறது என்று எல்லோரும் பாருங்கள்". ப.41** எப்பொழுதுமே யாரையாவது சார்ந்து நிற்கும் சார்பு நிலையினை மாற்றித் தற்சார்பு கொண்டவளாக மாறும் இந்தத் திரௌபதி மரபு மாற்றத்தின் வித்து. **"நான் பெண் பெண்களில் ஒட்டுமொத்த சக்தி தான் நான். பொறுமையாக இருப்பாள் பெண். பொங்கினால் என்றால் அந்த பிரளயத்தை எந்த ஆணாலும் தாங்க முடியாது நான் வெறி கொண்ட தாயடா எங்கே எழுந்து வா. என்னை தொடுவாயா என்று திரௌபதி போர்க்குரல் எழுப்பி ஒற்றைப் போராளியாகிக் கொண்டிருந்தாள்" ப.42** திரௌபதியின் கோபம் பாண்டவர்கள்மீதும் கௌரவர்கள்மீதும் மட்டுமல்ல, பெண்ணை அவமானப்படுத்த, காயப்படுத்த, அடிமைப்படுத்த நினைக்கும் ஒவ்வொருவருக்கும் இது நல்ல பாடமாக அமைக்கப்பட்டுள்ளது.

**விலைமகளின் விவாதம்**

திருவிவிலியத்தில் கணக்கெடுப்பில் கூட பெண் ஒரு இனமாக அடையாளப்படுத்த பெறாத நிலையில் இயேசுவைக் குற்றப்படுத்துவதற்காக அவர்முன் ஒரு விலைமகள் குற்றவாளியாக நிறுத்தப்படுகிறாள். குற்றம் சாட்டப்பட்டவர் கல்லால் எரிந்து கொல்லப்படுதல் அன்றைய வழக்கம். திருவிவிலியத்திலோ இயேசு எவர் குற்றமற்றவரோ அவர் முதலில் கல் எரியட்டும் என தீர்ப்பிடுகிறார். ஆனால் இந்த விலைமகளோ தன் பக்க நியாயத்தைத் தானே கூறுவதாக அமைக்கப்பட்டுள்ளது. தான் குற்றவாளியெனில் தான் மட்டுமா? என்னுடன் குற்றத்தில் ஈடுபட்டவர்களும் தானே குற்றவாளி என்ற நியாயவாதத்தை முன்வைக்கிறாள். தவறெனில் அந்தத் தவறில் ஈடுபட்ட இருவருமே தான் தண்டனை பெற வேண்டும் என்று விவாதிப்பது, காலங்காலமாக அடிமைப்பட்டு கிடந்த இந்தப் பெண் சமூகம் தான் மட்டும் குற்றபடுத்தப்படுவது ஏன் என சிந்திக்கத் தலைப்பட்டதாகச் சித்திரிக்கப்பட்டுள்ளமை பெண்மீது சுமத்தப்பட்ட பல்வேறு குற்றங்களையும் மலடி, வேசி போன்ற பட்டங்களையும் கேள்விக்கு உள்ளாக்குகிறது. **"என் நியாயத்தை சபையேற்றாமல் நான் விடமாட்டேன் குட்ட குட்ட குனிபவள் பெண் என்று நினைக்காதீர் பெண் பொங்கி எழுந்தால் தாங்க மாட்டீர்கள்" பக்.55,56** தன்னை இந்நிலைக்குத் தள்ளிய சமூகம் தன்னை மட்டுமே குற்றவாளியாக அடையாளப்படுத்தி தண்டிக்கிறதே தவிர தனது தவறு என்ன என்பதை இச்சமூகம் உணர்வதற்கான வழியாக இப்பாத்திரம் அமைக்கப்பட்டுள்ளது.

**"இவள் விபச்சாரி என்றால் அவன் விபச்சாரன் இவளை பரத்தை என்றால் அவன் பரத்தன் இவள் வேசி என்றால் அவன் வேசியன் இவள் தாசி என்றால் அவன் தாசியன் என்று ஏன் ஆண்களைச் சொல்லக்கூடாது" ப.56** என புரட்சி விதைக்கப்படுகிறது.

**தெரிந்த முகத்தின் புதிய அறிமுகம்**

நல்லதங்காள் என்ற பெண் தன்னைக் காக்க வேண்டிய கணவனும், தான் காப்பான் என நம்பி வந்த அண்ணனும் உதவாத நிலையில் அண்ணியிடம் கொடுமைப்பட்டு வெளியேறி தற்கொலை செய்து கொள்ளாது தனித்து வாழ எண்ணுகிறாள். அவர்கள் என்னைக் கிணற்றில் தேடட்டும் என்று

தனது நீள கூந்தலை அறுத்துப் போட்டுச் செல்கிறாள். யாரையாவது சார்ந்து வாழ எண்ணிய சார்பு வாழ்க்கையிலிருந்த நல்லதங்காளாக இருந்திருந்தால் அவள் அந்த கிணற்றுக்குள்ளேயே தனது வாழ்வை முடித்திருக்க வேண்டும். ஆனால் யாரையும் சாராது தன்னைத்தானே காத்துக் கொள்ளும் நிலைக்குப் பெண்கள் உயர்த்தப்பட வேண்டும் என்பதாலேயே இந்த நல்லதங்காள் புதிய உலகத்தைப் படைக்கத் தன் பிள்ளைகளுடன் புறப்படுகிறாள். இந்நிலையில் விலைமகளைச் சந்திக்கிறாள் தன் பக்க நியாயங்களால் பல்வேறு புரட்சிக் கருத்துகளை விதைத்து வெளியேறிவிட்ட இந்த விலைமகள் பெண் மீது இந்தச் சமூகம் வழிவழியாகத் தொடர்ந்து சுமத்திய பல்வேறு குற்றச்சாட்டுகளைக் கேள்விக்குள்ளாகிறாள்.

**"வலிக்கிறது**
**என்னுடல் புசித்தவனும்**
**உத்தமன்**
**வேசமிட்டு உன்னை**

**வேசிமகள் என்று ஏசையிலே…"**[3]

தவறு எனில் தண்டனைக்குரியவர் யாவருமே என்று கற்பு எனில் இரு கட்சிக்கு பொதுவில் வைப்போம் என்ற பாரதியின் சிந்தனையினைப் பின்பற்றக் காணலாம். **"பெண் இல்லாமல் இந்த உலகம் இயங்க முடியாது என்று தெரிந்தும் வேண்டுமென்றே மட்டம் தட்டி மகிழும் ஆண்வர்க்கம் - இவர்களை அடியோடு வெறுக்கிறேன்" ப.64**

திரௌபதி அங்கு வர காலங்காலமாக ஆண்களால் அடக்குமுறைகளுக்கு ஆட்பட்டு அவமானங்களால் கூனிக்குறுகி நிற்கும் பெண்ணினம் தலைதூக்க வேண்டியதன் அவசியத்தைத் திரௌபதி உணர்த்துகிறாள். இந்த மூன்று பெண்களும் இணைந்து அடுத்த ஒரு புதிய உலகத்தை உருவாக்க எண்ணுகின்றனர்.

**"பெண்ணை தாயாய் தமக்கையாய் தங்கையாய் தாரமாய் இன்னும் எல்லா உறவு நிலைகளிலும் புரிந்து கொள்ளக்கூடிய பக்குவம் உள்ளவர்களாய் அப்பழுக்கில்லாத புதிய மக்களாய் உருவாக்க வேண்டும் நாம் விடுகின்ற மூச்செல்லாம் இந்த புதிய சமூகத்தை உருவாக்கவே"ப.65** என மூவரும் இணைந்து பெண் மீதான மரபு சார்ந்த கட்டுப்பாடுகளை மாற்றிப் புதிய உலகம் படைக்க முற்படுகின்றனர்.

**முடிவுரை**

காலங்காலமாக இந்தப் பெண் சமூகம் மரபு என்ற பெயரில் பல்வேறு உரிமைகளை இழந்து பல விதங்களிலும் அவமானங்களைச் சந்தித்து தன் சுயத்தை இழந்து வாழும் வாழ்விற்கு இங்கே முற்றுப்புள்ளி வைக்கப்படுகிறது. கணவனால் கைவிடப்பட்ட பெண்ணும் சமூகத்தால் புறக்கணிக்கப்பட்ட பெண்ணும் இங்கு துணிந்து வாழலாம். இந்த மரபுமாற்றச் சிந்தனை பெண் இனத்திற்குப் பெண்ணுரிமையை மீட்டுத் தரும் என்பதில் ஐயமில்லை.

**அடிக்குறிப்பு**

1.தொ.பரமசிவன்,மரபும் புதுமையும்,(காலச்சுவடு பதிப்பகம்,2019),ப.12.

2. தொ.பரமசிவன்,தெய்வம் என்பதோர், (அறம் பதிப்பகம்,2022),ப.27.

3.சிந்தை சீனிவாசன், விலைமகள், Eluthu.com பதிவு -17 ஆகஸ்ட்2018

**துணைநூற் பட்டியல்**

1.காந்திமேரி.எம்.எஸ் - பொம்மக்காவின் மூன்று பெண்கள்,
அறக்கட்டளை –பதிப்பு,
புதுவை -1,
முதற்பதிப்பு 2015.

2.பரமசிவன்.தொ – தெய்வம் என்பதோர்,
அறம் பதிப்பகம்,
திருவண்ணாமலை -632316
முதற்பதிப்பு 2022

3. .பரமசிவன்.தொ – மரபும் புதுமையும்,
காலச்சுவடு பதிப்பகம்,
நாகர்கோவில் -629001,
முதற்பதிப்பு 2019.

இணையமுகவரி
Eluthu.com
http://eluthu.com Eluthu.com